**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 733/2023</u>**

**<u>வழக்கு சாட்சி PW-5</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரவி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | செல்லப்பா | தொழில் | : | பூ வியாபாரம் |
| கிராமம் | : | சிவகாமிபுரம் | வயது | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 27th, 2025.

**(2, 3 ம் எதிரி ஆஜரில்லை. 1ம் எதிரி ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் சிவகாமிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பூ வியாபார வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். நான் அந்த கையெழுத்தை போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆலங்குளத்திலுள்ள அருணா ஹோட்டலுக்கு எதிரேயுள்ள என்னுடைய பூக்கடையில் வைத்து போட்டு கொடுத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.29 17:14:49 +0530

# வாக்குமூலம்
# தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
# வழக்கு எண் : SC.No. 733/2023
# வழக்கு சாட்சி PW-6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாரதிதாசன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கொடிமுத்து | தொழில் | : | தலைமைக்காவலர் |
| கிராமம் | : | கல்லிடைக்குறிச்சி | வயது | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 27th, 2025.

**(2, 3 ம் எதிரி ஆஜரில்லை. 1ம் எதிரி ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம், கல்லிடைக்குறிச்சி காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன். நான் இதற்கு முன்பு 2018ம் ஆண்டு ஆலங்குளம் காவல்நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணிபுரிந்தபோது, ஆலங்குளம் காவல் நிலைய குற்ற எண்.305/2018 வழக்கின் எதிரிகளான முருகன், மூர்த்தி, ஸ்ரீதரன் ஆகியோர்களை ஆலங்குளம் காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள், ஆலங்குளம் ராமர் கோவில் அருகே வைத்து 30.05.2018ம் தேதி, மாலை 05.30 மணிக்கு எதிரிகளை கைது செய்யும் போதும், வழக்கின் சொத்துக்களான 2 அரிவாள்களை 05.40 மணிக்கு கைப்பற்றும் போதும் நானும், காவலர் கிருஷ்ணகுமாரும் உடனிருந்து கையெழுத்து செய்தோம். பின்பு 06.30 மணிக்கு வழக்கின் எதிரிகளை நிலையத்திற்கு கொண்டு வர

ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக இருந்தேன். அத்தாட்சி அ.சா.ஆ.3 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.29 17:14:56 +0530